EASTERN UNIVERSITY, SRI
11 OCT 2014

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம் /புவியியற்துறை

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு/பொதுக் கலைமாணித் தேர்வு 2009/2010 (Sept./Oct. 2014)

| OCC 3102: சூழல் முகாமைத்துவம் (Environmental Management) | நேரம் 03 மணித்தியாலங்கள் |
|---|---|

- எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.

1)

a) சூழல் என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

b) சூழலை முகாமை செய்யவேண்டியதன் அவசியம் யாதெனக் கருதுகின்றீர்?

(08 புள்ளிகள்)

c) நிலவளம் தரமிளக்கக் காரணமான காரணிகளைக் கண்டறிந்து, அவற்றிலிருந்து நிலவளத்தைப் பாதுகாக்க நீர் கூறும் உபாயங்கள் தொடர்பில் மூன்று காரணிகளைத் தேர்ந்தெடுத்து கருத்துரைக்குக.

(12 புள்ளிகள்)

2)

a) 'போசனை மீள்வட்டம்' என்பதனால் நீர் கருதுவது யாது?

(05 புள்ளிகள்)

b) சூழல் தொகுதி ஒன்றில் சக்திப் பாய்ச்சல் செயன்முறை குறித்துக் கருத்துரைக்குக.

(08 புள்ளிகள்)

c) சூழல் தொகுதி ஒன்றின் நிலைபேற்றுக்கு பிரிகையாக்கிகள் ஆற்றும் பங்களிப்பு பற்றி விளக்குக.

(12 புள்ளிகள்)

3)

a) பூகோள வெப்பமாதலுக்கு பங்களிக்கின்ற பச்சைவீட்டு வாயுக்களின் போக்குப் பற்றிக் குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

b) பூகோள வெப்பமாதல் காரணமாக உயிர்ச் சூழல் அமைப்பு எதிர்கொள்ளும் சால்களை உதாரணங்களுடன் முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

c) ஓசோன் படையின் சிதைவுக்கு காரணமான மனித செயற்பாடுகளைக் குறிப்பிடுவதுடன், இன்று ஓசோன் படையைப் பாதுகாப்பது தொடர்பில் சர்வதேச ரீதியான முன்னெடுப்புகள் தொடர்பில் தெளிவுபடுத்துக.

(08 புள்ளிகள்)

4) “ஆரோக்கியமான மனித வாழ்க்கை தரமான சூழலிலேயே தங்கியுள்ளது” இக் கூற்றின் பொருத்தப்பாட்டை நுணுகி ஆராய்க.

(25 புள்ளிகள்)

5) ‘நிலைபேண் அபிவிருத்தி’ சூழலுடன் கொண்டுள்ள தொடர்பினை விளக்கி, அதனைக் கடைப்பிடிப்பதில் வளர்முக நாடுகள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து விமர்சிக்குக.

(25 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றி விளக்கக் குறிப்புரை தருக

a) நீர் வளமும், மாசாக்கமும்

b) இயற்கைச் சூழலும் மருத்துவமும்

c) திண்மக் கழிவு முகாமைத்துவம்

(12.5x2=25 புள்ளிகள்)